பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

ஈழநாடு
THE EELANAADU

ஒளி 30 வைகாசி 10 ஜூ ஆவிர்: 16 இதழ் 102
யாழ்ப்பாணம் புதன்கிழமை 24 5 78

லாலா
சோப்
பிரகாச சலவை!
பளிச்சிடும் வெண்மை!
ஈழம் எங்கும் கிடைக்கும்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி



தேடப்படுவதாக சுவரொட்டி விளம்பரம் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்ட முப்பத்தெட்டு இளைஞர்களில் நேற்றுக்காலை யாழ். பொலிஸாரிடம் சரணடைந்த இருபத்திமூன்று இளைஞர்களை எண்ணிக் கணக்கெடுக்கும் யாழ். பொலிஸ் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டரையும் பொலிஸ் விசாரணைக்குச் செல்வதற்குத்தயாராக நிற்கும் இளைஞர்களையும் இப்படங்களில் காணலாம்.

# யாழ்நகரிலிருந்து 23பேர் கொழும்புக்கு விரைவு!

## எம்.பி.க்கள்மூலம் சரணடைந்தகாட்சி

(யாழ்ப்பாணம்)

வன்செயல்கள் சம்பந்தமாகப் பொலிசாரால் "தேடப்பட்டுவருபவர்கள்" என்று இரண்டாவது சுவரொட்டி மூலம் புகைப்படங்களுடன் விளம்பரப்படுத்தப்பட்ட முப்பத்தெட்டு இளைஞர்களில் இருபத்திமூன்று இளைஞர்கள் நேற்றுக்காலை கோப்பாய்ப்பிரதிநிதி திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை வீட்டில் யாழ்ப்பாணம் எம், பி. திரு. வெ. யோகேஸ்வரனினூல் யாழ். பொலிஸ் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. ரெரன்ஸ் பெரேரா விடம் கையளிக்கப்பட்டு பின்னர் யாழ் மாவட்ட பொலிஸ் அதிபர் திரு.டக்ளஸ் ரணமுத்து கலவிடம் சரணடைந்தனர்.

### கொழும்புக்கு அனுப்பப்பட்டனர்

இந்த இளைஞர்கள் யாவரும் உடனடியாகவே விசாரணைக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அவர்களின் பாதுகாப்புக் கருதி எந்தநேரத்தில் எந்த மார்க்கமாக அவர்கள் கொழும்புக்குக் கொண்டுசெல்லப்படுவார்கள் என்பது அறிவிக்கப்படாதிருந்தபோதிலும் விமான மூலம்தான் அவர்களைக் கொண்டுசெல்லவேண்டும் என்று திரு. யோகேஸ்வரன் வற்புறுத்தியிருந்தார். அவர்களின் பாதுகாப்புக்குத் தாம் பொறுப்பு என்று பொலிஸ் அதிபர் உறுதியளித்திருந்ததாகவும். தரைமார்க்கமாகவே அவர்கள் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டார்களென்றும் அறியப்படுகிறது.

"பொலிசாரால் தேடப்படுபவர்கள்" என்று முப்பத்தெட்டு இளைஞர்களின் புகைப்படங்களுடன் அவர்கள் பற்றிய விபரங்களையும் தெரிவித்து வெளியிடப்பட்ட சுவரொட்டி விளம்பரங்கள்பற்றி தேசிய அரசுப் பேரவையில் கடந்த வாரம் சாவகச்சேரி எம். பி திரு வி. என். நவரத்தினம் குறிப்பிட்டு "இந்த சுவரொட்டி விளம்பரங்களில் குறிப்பிடப்பட்டிருப்பவர்கள் பலரும் தங்கள் வீடுகளில் இருக்கின்றார்கள் என்று கூறியதை தொடர்ந்து இந்த இளைஞர்கள் பலருடனும் தமிழர் கூட்டணித் தலைவர்கள் கட்டணியினர் தொடர்புகொண்டதாகவும் இதை அடுத்து இந்த இளைஞர்களில் பலரும் கோப்பாய் பிரதிநிதி திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளையின் இல்லத்துக்கு வரவழைக்கப்பட்டார்களென்றும் தெரிகிறது.

### நேற்று அதிகாலை

நேற்று அதிகாலையிலேயே "தேடப்பட்ட" இளைஞர்கள் திரு. கதிரவேலுப்பிள்ளையின் இல்லத்தில் கூடியிருந்தனர். காலை ஏழுமணிக்குப் பொலிஸ் வாகனம் வருமென்றும், பொலிஸ் அதிபரிடம் சரணடைவதென்றும் திட்டமிடப்பட்டிருந்தாலும், இளைஞர்களைக் கொழும்புக்கு கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதால் அவர்களின் பாதுகாப்பும் பற்றி உறுதிசெய்யப்படுவதற்கான முயற்சிகளில் திரு. வெ. யோகேஸ்வரன், திரு. கதிரவேலுப்பிள்ளை மற்றும் கூட்டணித் தலைவர்களும் அக்கறைகொண்டிருந்தனர். இது சம்பந்தமாகப் பொலிஸ் அதிபருடனும் மற்றும் அதிகாரிகளுடனும் அவர்கள் அடிக்கடி தொடர்புகொண்டனர்.

காலை 10 மணிக்கு முற்பகல் ஒன்பதரை மணி

[6-ம் பக்கம் பார்க்க]

## "நாட்டைப் பிரிக்க அரசு அனுமதிக்காது"

—அமைச்சர் மத்யூ

(திருகோணமலை)

நாட்டைப்பிரிப்பதற்கு அரசு ஒருபோதும் அனுமதியாது என்று கைத்தொழில், விஞ்ஞான விவகார அமைச்சர் திரு. சிறில் மத்யூ இங்கு தெரிவித்தார்.

சிங்கப்பூர் நிறுவனம் அமைக்கும் மா ஆலைக்கான அடிக்

[6-ம் பக்கம் பார்க்க]

## 115 பேர் மாண்டனர் அனல் காற்றினால்

புதுடில்லி, மே 23

இந்தியாவின் வடக்கிலும், தெற்கிலும் தொடர்ச்சியாக வீசும் அனல் காற்றுக்கு இன்று வரை நூற்றுப்பதினைந்து பேர் பலியாகியுள்ளனர்!

பீஹாரில்தான் அதிகமானவர்கள் இறந்திருக்கின்றனர். இன்று மட்டும் இதுவரை 47 பேர் பலியாகிவிட்டனர்.

இன்று பீஹாரில் எட்டுப் பேரும், உத்தரப் பிரதேசத்தில் எட்டுப் பேரும், ஆந்திரப் பிரதேசத்தில் பதினைந்து பேரும் அனல் காற்றினால் உயிரிழந்துள்ளனர். இப்பகுதியில் தொடர்ந்தும் அனல் காற்று வீசும் அறிகுறி காணப்படுகிறதாம்.

## 4 இடங்களில் அமிரின் 'ஜீப்' சோதனை

[யாழ்ப்பாணம்]

எதிர்க்கட்சித் தலைவரும், காங்கேசன் துறைப் பிரதிநிதியுமான திரு. அமிர்தலிங்கமும், திருமதி அமிர்தலிங்கமும் நேற்று முன் தினமிரவு அவர்களது 'ஜீப்' வண்டியில் பயணம் செய்துகொண்டிருந்த போது நான்கு இடங்களில் பொலிஸாராலும், இராணுவத்தினராலும் அவர்களது வாகனம் சோதனையிடப்பட்டது.

ஐந்தன் கேணிச் சந்தியிலும் பின்னர் தெல்லிப்பளை, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களிலும் திரு. அமிர்தலிங்கத்தின் 'ஜீப்' சோதனைக்குள்ளானது. வாகனங்கள் பலவும் இப்பகுதியில் சோதனையிடப்படுவதால் திரு அமிர்தலிங்கமும் தங்களது வாகனத்தை நிறுத்தச் சொன்னதும் நிறுத்திச் சோதனைக்கு இடமளித்தார்.

## கொழும்பு சென்ற 23 இளைஞர்கள்

வன்செயல்கள் காரணமாகத் தேடப்படுபவர்கள் என்று பொலிஸாரால் வெளியிடப்பட்ட இரண்டாவது சுவரொட்டி விளம்பரத்தில் பகிரங்கப்படுத்தப்பட்ட தமிழ் இளைஞர்களில் இருபத்திமூன்று பேர் நேற்றும் பொலிஸில் சரணடைந்து, கொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். அவர்கள் பெயர் விபரம் வருமாறு:

1. கே. இதிலைந்தராஜா
2. எஸ். சபாரத்தினம்
3. என். சிவசரத்தினம்
4. சி. சத்தியார்
5. வண்ண ஆனந்தன் எனப்படும் ஆனந்தவிநாயகம்
6. இ. சபாரத்தினம்
7. எஸ். புஷ்பராஜா
8. ஏ. விவேகானந்தன்
9. த. முத்துக்குமாரசாமி
10. மாவை. சேனாதிராசா
11. ரி. இராஜலிங்கம்
12. எஸ். சபாலிங்கம்
13. வை. பாலகிருஷ்ணன்
14. ஐ பாலரத்தினம்
15. என். ஏ. அம்பரசிங்கம்
16. வி. சுப்பிரமணியம்
17. எஸ். குருகுலசிங்கம்
18. எஸ். சந்திரகுமாரன்
19. பி. வி. திசவீரசிங்கம்
20. வை. திருத்தகுமார்
21. எஸ். மகேந்திரன்
22. ரி. ஜீவராஜ்
23. கிருபாகரன்

இறக்குமதி செய்யப்பட்ட CITIZEN
மற்றும் கைக்கடிகாரங்களும் கிடைக்குமிடம்
நா. சரம்பசிவம் அன் கோ.,
யாழ்ப்பாணம். 9347

## வரி விளம்பரம்

### தேவை

கண்ணுபிடி தொழிற்சாலைக்கு வேலை பழகியவர்களும் வேலை பழகுபவர்களும் தேவை சம்பளம் ரூபா ஆறு கொடுக்கப் படும். நேரில் வரவும். சேவி ஸோஸ் அன் மெத்தல் வேக்ஸ், நீர்வேலி. 9224

யாழ்ப்பாணத்தில் பகுதி நேர, முழு நேர வேலைக்கு பிள்ளை பார்க்க, வீட்டு உதவிக்கு அனுபவம் உள்ள பெண் தேவை. நேரில் வரவும். 11, கண்டி ரோட், யாழ்ப்பாணம். 9340

கண்ணுபிடி தொழிற்சாலைக்கு வேலை பழகுவதற்கு 14 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் தேவை. வேலை பழகும் பொழுது சம்பளத்துடன் வேறு சலுகைகளும் பரிசுகளும் கிடைக்கும். உடனடியாக நேரில் வரவும். 25, ஸ்ராண்லி வீதி, யாழ்ப்பாணம். 9367

### கல்வி

1979ம் ஆண்டு வைகாசி/ஆனி பரீட்சைகளுக்குரிய C. E I. part 1, part 2 (lond.) - civil, electrical, mechanical and chemical engineering, city and guilds electrical engineering practice - part I, II, & III. Diploma in draughtsmanship. G. S. Q உயிரியல், பௌதிக (Bio. and physical science விஞ்ஞான பாடங்களுக்குரிய செயன்முறைப்பயிற்சிகள் வித்தியாதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன ! விஞ்ஞான பயிற்சிகள் First in commerce புதிய வகுப்புகள் 27-5-78ல் ஆரம்பமாகின்றன. விபரங்களுக்கு அதிபர், உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்; 9353

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல. 84 அ — பிரிவுகள் 524, 532)

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் காலஞ்சென்ற வைத்திலிங்கம் காசிப்பிள்ளை என்பவரின் மரணசாதனத்தின் சொத்தின் விடயத்தில்

மரண இறைப்பியல்

வைத்திலிங்கம் காசிப்பிள்ளை கைம்பெண் தங்கம்மா, ஆலடி, காரைநகர் மேற்கு.

மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. T/3333

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக / மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு ஆனி மாதம் 7-ந் நாளன்று முற்பகல் 10 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
பொ பாக்கியநாதன்,
பதிவாளர்.

1978-ந் ஆண்டு வைகாசி மாதம் 11-ம் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது. 9338

### தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் நவீன வசதிகள்கொண்டதும் ரூபா 300க்கு குறையாத வாடகை கொண்டதுமான வீடு தேவை. தொடர்பு: C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 9370

நன்கு அனுபவம் வாய்ந்த அச்சுக்கோப்பாளர் ஒருவர் உடன்வரவும். தமிழ்ராஜா அச்சகம், 39/3, காங்கேசன் வீதி யாழ்ப்பாணம். 9360

### தவறிவிட்டதா?

லேடீஸ் பேர்ஸ் ஒன்று பரமேஸ்வரச் சந்தியில் விழுந்திருந்து எடுக்கப்பட்டது. தகுந்த ஆதாரங்களுடன் நேரில் வரவும். V. S. செல்லையா, "கலாபவனம்", உரும்பராய் கிழக்கு, உரும்பராய். 9364

### கல்வி

மே மாதம் 1 வருடத்துக்கான வெளிக்கள தொழிற்சாலைப் பயிற்சிகளுடன் தமிழிலும், ஆங்கிலத்திலும், Air Conditioning and Refrigeration வகுப்புகள் நடைபெறுகின்றது. தபால்மூல போதனையுண்டு. விபரங்களுக்கு எஸ். இஞ்ஞானம், 126, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 9359

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

### பின்உறுதிக் கட்டளை அறிவித்தல்

ஊர்காவற்றுறை, கரம்பனைச் சேர்ந்த இரண இறைப்பியல் வேலுப்பிள்ளை நாராயணபிள்ளை கந்தையாவின் மரண சாதனமெழுதப்படாத சொத்துவிடயமாக

கந்தையா சிதம்பரநாதர், கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறை;

—மனுதாரர்

இல த. 3343

மேலே உள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின் உறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1978ம் ஆண்டு வைகாசி மாதம் 26ந் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்உறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்

தேதி 15-5-78

வரைவு
இ. இளசுப்பிரமணியம்
மனுதாரின் பதிவுபெற்ற சட்டத்தரணி.

9317

### பொருட்காட்சி

[யாழ்ப்பாணம்]

வட்டுக்கோட்டை தென்னை வாலிபர் சங்கச் சம்மேளனம் பொருட்காட்சி ஒன்றை வட்டு இந்துக்கல்லூரியில் அடுத்தமாதம் நடத்துகிறது.

அடுத்த மாதம் 17ம் திகதி முதல் 20ம் திகதிவரை இப்பொருட்காட்சி நடைபெற உள்ளது.

இப்பொருட் காட்சியில் டெலிவிஷனும் விசேடமாக அமைக்கப்பட உள்ளது.

இப் பொருட்காட்சியை ஒட்டி கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரை, பேச்சு, சித்திரப்போட்டிகளும் நடத்தப்பட உள்ளன. [இ]



### இலங்கைப் பிரதிநிதியாக சசெக்ஸ் சென்றார்

கொழும்பு தொழில் தலைமைக் காரியாலயத்தைச் சேர்ந்த உதவி தொழில் அதிகாரியான திரு. வி. ரி. இரத்தினலிங்கம் 'வேலை முறையும் வேதனமும்' என்னும் பொருள்பற்றிய சர்வதேச கருத்தரங்கில் இலங்கையின் சார்பில் பங்குபற்றுவதற்காக இங்கிலாந்திலுள்ள சசெக்ஸ் பல்கலைக்கழகம் சென்றுள்ளார். இக் கருத்தரங்கு பிரிட்டிஷ் கவுன்சிலின் ஆதரவில் நடைபெறுகின்றது.

இவர் யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்த வைத்திலிங்கம் தம்பி தம்பதிகளின் புத்திரர் ஆவர். இவரும் தமது மற்றைய வி. ரி. சகோதரர்கள் போல் விளையாட்டுத் துறையில் பிரபல்யம் பெற்றவர். இவர் மெய்வல்லுநர் போட்டிகளிலும், குறுந்தூர விரை ஓட்டங்களிலும் தமது பாடசாலையிலும், மாவட்டப் போட்டிகளிலும் சிறந்து விளங்கினர். இந்தியாவில் நடைபெற்ற சர்வகலாசாலைகளின் மெய் வல்லுனர் போட்டியில் சென்னைப் பல்கலைக் கழகத்தை குறுந்தூர விரை ஓட்டங்களில் பிரதிநிதித்துவம் வகித்தார். இவர் யாழ். இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் ஆவர்.

### கிராமங்கள் தோறும் கிளைகள் அமைப்பர்

[வண்ணார்பண்ணை]

தமிழர் பிரதேசங்களில் கிராமந்தோறும் கிளைகள் நிறுவுவதற்கும், தொகுதிகள் தோறும் அமைப்பாளர்களை நியமிப்பதற்கும் தமிழர் சுயாட்சிக்கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் கூடிய தமிழர் சுயாட்சிக்கழகத்தின் செயற்குழு இந்த முடிவை எடுத்துள்ளது.

கழகத் தலைவர் திரு. வ. நவரத்தினம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் திரு செ. கோடீஸ்வரன், துணைச்செயலாளர் திரு. ந. ஸ்ரீகாந்தா ஆகியோரால் பல தீர்மானங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. இத் தீர்மானத்தின் அடிப்படையில் தொகுதிகள் தோறும் அமைப்பாளர்களை நியமிப்பதற்கு குழு ஒன்றும் தெரியப்பட்டது.

கழகத்தின் ஆதரவுடன் இரண்டு பத்திரிகைகளை வெளியிடுவதென்றும் கழகத்தின் ஆதரவுடன் அச்சகம் ஒன்றை நடத்துவதெனவும் இக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. (உ)

### பரி. யாக்கோபு ஆலயத்தில் பூஜை

(அரியாலை)

கொழும்பு அத்தியட்சாதினத்தின் யாழ்ப்பாண ஆர்ச் டீக்கனாக நியமனஞ்செய்யப்பட்ட அருட்திரு சாம் ஹோசிங்கள் அடிகள் நல்லூர் பரி யாக்கோபு ஆலயத்தில் தமது பூசையை நிறைவேற்றினர்.

மாஸ்கோவில் இலங்கை மாணவர்

# நடத்திய கலைவிழா

## பண்டாரவன்னியன் நாடகத்துக்கு பாராட்டு

மாஸ்கோ, மே 23

மாஸ்கோவிலுள்ள லுமும்பா பல்கலைக்கழகத்தில் பயிலும் இலங்கை மாணவர்கள் நிகழ்த்திய கலைவிழாவின் போது அங்கு பயிலும் தமிழ் மாணவர்கள் விடுதலை வீரன் பண்டாரவன்னியனின் சரித்திரத்தை தணியாததாகம் என்ற தலைப்பில் நாடகமாக நடித்தனர்.

இக்கலைவிழாவில் இங்களத்தில் இருநாடகங்களும் தமிழில் ஒரு நாடகமும் மேடையேற்றப்பட்டது. தமிழ் நாடகத்துக்கும் பெரும் வரவேற்பு இருந்தது.

இத்தமிழ் நாடகத்தில் மூன்று காட்சிகள் மட்டுமே இடம்பெற்றிருந்தன. ஒவ்வொரு காட்சியின் ஆரம்பத்திலும் அக்காட்சியின் மொழிபெயர்ப்பு ரஷ்ய மொழியில் கொடுக்கப்பட்டது. இந்நாடகத்தில் 'கொஞ்சும் சலங்கை' என்ற திரைப்படத்தில் இடம்பெறும் 'சிங்கார வேலனே' என்ற பாடலும், பாடலுக்கு சிங்கள மாணவியின் பரதநாட்டியமும இடம்பெற்றன!

இந்நாடகத்தில் ரவிச்சந்திரன் ராஜசுந்தரம், ஸ்ரீதரன் கனகரத்தினம், பாலகுமார் சிவகுரு, ரஃபியுடீன், நாராயணமூர்த்தி, ஞேசன் ரவீந்திரா, கலாரஞ்சி ஆகியோர் நடித்தனர். தலைமைதாங்கிய ரஷ்யாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தைச் சேர்ந்த கதிரமலைநாதன் தம்பதியின் பாராட்டுக்களைத் தட்டிக்கொண்டனர்.

இந்நாடகத்தைத் தயாரித்தவர் ஓர் இந்தியத் தமிழ் மாணவராகும்.

மாஸ்கோவில் நடைபெற்ற இக்கலைவிழாவுக்கு ஏறக்குறைய 40 தமிழர் வரை சமூகமளித்திருந்தனர்.

அனைவரது பாராட்டுக்களையும் பண்டாரவன்னியன் நாடகம் பெற்றுக்கொண்டது. இதுவே மாஸ்கோவில் அரங்கேறிய முதல் தமிழ் நாடகமாகும்.

மேற்படி நாடகத்தில் உயர்கல்வி பெறும் இலங்கை இந்திய தமிழ் மாணவர்கள் ஒன்றிணைந்து 'எரிமலை, என்ற பெயரில் ஒரு கையெழுத்துப் பத்திரிகையையும் வெளியிட்டு வருகிறார்கள்.

### கொடித்தினம் 27-ந் திகதி

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய சுயரோக தடுப்புச்சங்க யாழ்ப்பாணக் கிளையால் ஒத்திவைக்கப்பட்ட கொடித்தினம் இம்மாதம் 27ந் தேதி அனுஷ்டிக்கப்படவிருக்கிறது. (ச-அ)

### கோட்டு விற்பனை விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

இல. ஈடு/539

1. செல்லையா நடராசா, விமன்காமம், தெல்லிப்பழை.

வழக்காளி

எதிராக

1. செல்லையா சித்திரவேலுவும் பெண்
2. தங்கமணி அல்லது விறிசித்தம்மாவும், காங்கேசன்துறை.

எதிராளிகள்

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டின் 539-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியையும் அதனுள்ளிருக்கும் வீட்டையும் 1978-ம் ஆண்டு ஆனி மாதம் 7-ந் திகதி (7-6-78) புதன்கிழமை 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

#### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபா 6586-66. 26-2-75 தொடக்கம் 21-5-76 வரைக்கும் 4000/-க்கு வருடம் ஒன்று 14% வட்டியும் அதன் இறுக்கப்படும் வரை வருடம் ஒன்றுக்கு 5% வட்டியும் வழக்குச்செலவு 634/- (இதில் நடைபெற்ற செலவு ரூபா 410-45. நடைபெறவேண்டிய செலவு ரூபா 120-45, மேலதிக சமாசமயச் செலவு ரூபா 103-55)

#### ஆதனடாப்பு

வடமாகாணம்யாழ்ப்பாணம் பெரும்பிரிவு வலிகாமம்வடக்குப்பகுதி தெல்லிப்பழை கோவிற்பற்று பளை இறை "பிச்சருவளவு" குளி 14.7 பதினாலு தசம் ஏழும் செய்யவிர் வரன் பயிர்களும் வேம்பும் கிணறும் இது உலாந்தா ஜே டி. வீரசிங்கம் 1956-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ந் திகதி அளந்து தயாரித்த "2651 ஏ" இலக்கப் படத்தில் இரண்டாம் துண்டாகக் காட்டப்பட்டது. இதற்கெல்லை கிழக்கு ரோட்டு வடக்கு ஒழுங்கை, மேற்கு முத்துசாமி வல்லிபுரத்துக்கும் பங்காளருக்குமுரியவாதனம், தெற்கு வடிவேலு மாணிக்கத்துக்குரியவாதனம் இதடங்கலும்.

மூ. விஜயராசன்,
நீதிமன்ற விற்பனை விலைதிப்பாளர்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்,
6-5-78; 9365

யாழ். ஐக்கிய லாபநிதி

### பற்றுவரவுடையோர் சங்கம்

டி சங்கப் பொதுக்கூட்டம் 28-5-78 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ்ப்பாணம் பெரியகடை பாரதி பாஷா வித்தியாசாலையில் நடைபெறும்.

அங்கத்தவர்கள் சமுகம் தரவும்.

சி விஸ்வலிங்கம்,
செயலாளர்.

9866

ஈழநாடு
The Eelanaadu

# சட்டத்தரணிகளான எம்.பி.க்களே அதிகம் கலந்துகொண்ட விவாதம்

## சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினர் கூட்டணியினர்

### தலைமன்னார் இறங்கு துறை

ரயில் மார்க்கமாக இந்தியா செல்லும் பிரயாணிகள் தலைமன்னார் இறங்கு துறையில் எதிர்நோக்கும் கஷ்டங்கள் குறித்து ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு போக்குவரத்து அமைச்சர் முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது.

தலைமன்னார் இறங்கு துறையில் நிகழுவதாகக் கூறப்படும் ஒழுங்கீனங்கள் பற்றி விசாரணை செய்து அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு புகையிரதத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவரை போக்குவரத்து அமைச்சர் நியமித்துள்ளார். ஒழுங்கீனங்கள் ஏதாவது இருப்பின் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான உடன் நடவடிக்கைகள் எடுக்குமாறும் அந்த அதிகாரி கேட்கப்பட்டுள்ளார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் காரணமாக இந்தியப் பிரஜாவுரிமை பெற்றுத் தாயகம் திரும்பும் பிரயாணிகளின் தொகையும் இப்போது அதிகரித்துள்ளது. இதுதவிர இந்தியாவுக்குச் செல்வதற்கு இதுவரைக்கும் இருந்துவந்த பலத்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதால் இந்தியா செல்லும் பிரயாணிகள் தொகை முன்னரைவிட இப்போது பலமடங்கு அதிகரித்துள்ளது.

தலைமன்னார் இறங்குதுறையில் பிரயாணிகள்படும் கஷ்டம்பற்றிப் பல வருடங்களாகப் புகார் கூறப்பட்டு வந்திருக்கிறது. இப்புகார்களுக்கு அந்தந்தநேரம் ஏதோ சாக்குப்போக்குச் சொல்வதும் வழக்கமாகிவிட்டது. ஆனால் பிரயாணிகளின் கஷ்டங்கள் நீங்கிய பாடாக இல்லை.

இந்தியாவிலிருந்துவரும் கப்பல் மாலைநேரத்தில் தலைமன்னார் துறையை வந்தடைகிறது. கப்பல் கரையை நோக்கிவந்து கொண்டிருக்கும்போதே அங்கு யாரும் நிற்கவிடாமல் தலைமன்னார் துறைமுக ரயில் நிலையம் வரை மக்களைக் கலைத்துவிட்டு கதவைப் பூட்டிவிடுகிறார்கள். பின்னர் கப்பலிலிருந்து வரும் பிரயாணிகள் கப்பலில் சோதனைக்குள்ளாகிறார்கள். பின்னர் அவர்கள் துறைமுகச் சுங்கப்பகுதிக்கு அனுப்பப்படுகின்றனர். சுங்கப்பகுதி அறையும் மண்டபமும் மூடப்பட்டு வெளியிலிருப்பவர் எவரும் அவர்களைப் பார்க்க முடியாதபடி பரிசோதனை நடைபெறுகிறது. அவர்கள் கொண்டுவரும் பொருள்களுக்குத் தீர்வை விதித்ததும் அவர்கள் வெளியேறும் வாசலால் ஓடிவந்து அங்கு காத்திருப்பவர்களிடம் பணம் பெற்றுச் சென்று தீர்வை கட்ட வேண்டும். வாசலில் போர்ட்டர்கள் காத்திருக்கின்றனர். அவர்களின் உதவியும் தேவைப்படுகிறது.

இதேபோல் இந்தியா செல்லும் பிரயாணிகள் ரயில் தலைமன்னார் இறங்கு துறையை அடைந்ததும் போர்ட்டர்களே பொதிகளைச் சுமந்து செல்கின்றனர். பல சமயங்களில் பொதிகள் மாறுபடுவதும் பிரயாணிகள் அவதிக்குள்ளாவதும் சாதாரணம்.

பிரயாணிகள் இலகும் ஒழுங்கான முறையில் நடந்து கொள்வதில்லையென்பதும் உண்மையே.

ஆனாலும் தலைமன்னார் இறங்குதுறையில் இந்தியா செல்லும் பிரயாணிகளும் இந்தியாவிலிருந்துவரும் பிரயாணிகளும் படும் அல்லல் கொஞ்சமல்ல. வேறு எந்த நாட்டிலும் இதுபோன்ற தொல்லைகள் இருக்குமென்று சொல்ல முடியாது.

தலைமன்னார் இறங்கு துறையில் இடுமல்லாமல் இந்தியாவுக்குக் கப்பல் மார்க்கமாகப் பிரயாணம் செய்வதிலுள்ள தொல்லைகள் அனைத்தையும் நீக்கிச் சுகப் பிரயாணத்துக்கு போக்குவரத்து அமைச்சர் எடுக்கும் நடவடிக்கை வழி செய்யுமென்று எதிர்பார்க்கலாம்.

---

திரு. சிவசிதம்பரம் தெரிவித்த கருத்துக்களை வர்த்தக அமைச்சர் தமது வாதத்துக்கு எடுத்துக்கொண்டார்.

பிணை வழங்குவது தொடர்பான அதிகாரம் உயர் நீதிமன்றத்துக்கு மாற்றப்படுகிறதே தவிர வேறு எம்மாற்றமும் நிகழவில்லை. ஓர் அதிகாரத்தை ஒரு நீதிமன்றத்திலிருந்து இன்னொரு நீதிமன்றத்துக்குமாற்றுவதால் முந்திய நீதிமன்றத்தின்மீது நம்பிக்கை இல்லை என்பதல்ல.

### நானே ரிமாண்டில் இருந்திருக்கிறேன்

பிணை தொடர்பாக நான் பலதடவைகளில் ஆஜராகி வெற்றியையும் தோல்வியையும் கண்டிருக்கிறேன். அத்துடன் அரசியல் பழிவாங்கலுக்காக நானே ரிமாண்டில் வைக்கப்பட்டுமிருக்கிறேன்; எனவே பிணை தொடர்பாக எனக்கு பல்முறை அனுபவமுண்டு என்றும் சொன்ன அமைச்சர், மாஜிஸ்திரேட் நீதிமன்றங்களைப் பொறுத்தவரை 2 நிமிடங்களில் பிணையா அல்லது ரிமாண்டா என்று தீர்மானிக்கப்பட்டு விடுவதாகவும் இதனால் ஒன்றில் நீதியற்ற முறையில் ரிமாண்டில் வைக்கப்படுகிறார்கள், அல்லது நீதியற்றமுறையில் விடுதலைசெய்யப்படுகிறார்கள் என்றும், ஆனால் உயர்நீதிமன்றத்தில் இந்நிலை ஏற்படமுடியாது என்றும் கூறினார்.

### உயர் நீதிமன்றத்தில் நம்பிக்கை இல்லையா?

உயர்நீதிமன்றத்துக்கு அதிகாரத்தை மாற்றுவதனால் மாஜிஸ்திரேட் நீதிமன்றங்களில் நம்பிக்கை இல்லையா? என்று நீங்கள் எம்மைக் கேட்பதானால், உயர்நீதிமன்றத்தில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா? என்று நாம் உங்களைக் கேட்கலாமே என்று அமைச்சர் கூறவும் திரு. சிவசிதம்பரம்.

''உயர்நீதிமன்றம் செல்ல எத்தனைபேரால் முடியும்; மாஜிஸ்திரேட் நீதிமன்றத்திலிருந்து அதிகாரத்தை மாற்ற வேண்டாம் என்றே நாம் கேட்கிறோம்'' என்றார்.

யாரும் சொல்லலாம் என்று அமைச்சர் கூறவும் "என்ன செலவாகும்?—என்று திரு. சிவா கேட்டார்.

அமைச்சர் உயர்நீதிமன்றத்தில் மாஜிஸ்திரேட் நீதிமன்றங்களைவிட பொலிசாருக்கு குறைந்த அதிகாரங்களே உண்டு என்பதையும் சுட்டிக்காட்டினார்.

அச்சமயம் அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா குறுக்கிட்டு; சில மாஜிஸ்திரேட் நீதிமன்றங்களில் அவர்கள் நீதிமன்றமேசைகளிலும் இருப்பார்கள் என்று கூற, திரு. சிவசிதம்பரம்.

'அது நிச்சயமாக நீங்கள் ஆஜராகும் நீதிமன்றங்களிலா

த்தானிருக்கவேண்டும், வடக்கில் அப்படி இல்லை'—என்றார்.

### குற்றவாளிகள் அதிகம் சிரிக்கிறார்கள்

குற்றவாளிகள் தமக்குள்ளவசதிகளினால் அதிகம் சிரிக்கிறார்கள் என்றும் அச்சிரிப்பை அடக்க இம்மசோதா அவசியம் என்றும் கூறி அமைச்சர் அமர்ந்ததும் அடுத்து, எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் எழுந்தார்.

சட்டத்துறையில் 25 வருட அனுபவம் தமக்கிருப்பதாகவும் மற்றையவர்களைவிட தமது கட்சியினருக்கே இம்மசோதா மீதுபேச கூடுதலான தகுதி இருப்பதாக தாம்கருதுவதாகவும் குறிப்பிட்ட திரு. அமிர்தலிங்கம்—

அரசாங்கக் கட்சியினருக்கும் எதிர்க்கட்சியினருக்குமிடையிலான விவாதமாக இதனைக் கொள்ளாமல், நாட்டு மக்களுக்கு இம்மசோதா நன்மை பயக்குமா? என்பதனையே கருத்தில் கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

### அவுட்-ஒப்-ஓடர்

கிராமப் பகுதிகளில் வாழும் வறிய மக்களால் 24 மணிநேரத்தில் பிணைகோரி உயர் நீதிமன்றம் செல்லமுடியுமா? என்ற அவர் கௌரவ தபால் தந்தி அமைச்சர் தொலைபேசிகளை எந்நேரமும் 'அவுட்-ஒவ்-ஓடரில்' வைத்திருக்கும்போது கொழும்பில் ஒரு வழக்கறிஞருடன் தானும் தொடர்பு கொள்ளமுடியுமா? என்றார்.

---

## — மாலி —

### 'அமிர்' வியப்பு

பிணை வழங்குவது தொடர்பாக நீதிபதிகள் 2நிமிடங்களிலேயே தீர்மானித்துவிடுவதாக அமைச்சர் கூறியது தமக்கும் பெரும்வியப்பை அளிப்பதாகக் கூறிய திரு. அமிர்தலிங்கம். இவ்விடயத்தில் நீதிபதிகள் பல மணித்தியாலங்களுக்கு மாத்திரமல்ல மறுநாளும்கூட தீர்ப்பை ஒத்திவைத்திருக்கிறார்கள் என்றார்.

### நாடுமுழுவதும் சிறைச்சாலைகள் ஆக்கப்போகிறீர்களா?

இம்மசோதா மூலம் கீழ்நீதிமன்றங்களில் நம்பிக்கையில்லாத்தீர்மானத்தையும் பொலிசாரிடம் நம்பிக்கைத் தீர்மானத்தையும் நிறைவேற்றுகிறீர்கள். இதன்மூலம் நாடு முழுவதையும் சிறைச்சாலைகள் ஆக்கப்போகிறீர்களா! என்றும் கேட்ட திரு. அமிர்தலிங்கம் சுதந்திரத்தை விரும்பும் ஒவ்வொருவரும் இதனை எதிர்ப்பார்கள் என்றுகூறி தமது பேச்சை முடித்தார்.

### சு. க. எம். பி.க்கள் பேசமறுப்பு

அடுத்து பிரதி சபாநாயகர், கம்பஹா உறுப்பினர் திரு. எஸ். டி. பண்டாரநாயக்காவை பேசும்படி அழைக்கவும், அவர் தாம் அரசாங்க உறுப்பினர் ஒருவரின் பேச்சை அடுத்தே பேசவிரும்புவதாகவும், ஏற்கனவே எதிர்க்கட்சி

---

### மணிவாக்கு

நமது மனச்சாட்சிக்கு எதிராக நாம் செயல்படக்கூடாது.

—காந்தியடிகள்

---

யில் இருவர் பேசிவிட்டார்களென்றும் கூறினார்.

பிரதிச் சபாநாயகர் கொத்மலை உறுப்பினர் திரு. ஆனந்த தசநாயக்காவை அழைத்தபோது அவரும் அதே கருத்தையே தெரிவித்தார்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் அவ்வாறே கூற, அப்படியானால் விவாதத்தை முடித்துக்கொள்ளவென்று பிரதமர் கூற, பிரதிச் சபாநாயகர், ஒருவரும் பேசவிரும்பாவிடில் நீதி அமைச்சரை பதிலுரை வழங்கத் தாம் அழைக்கப்போவதாகத் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியினர் அவ்வாறு பிரச்சினைப்பட்டுக் கொண்டிருந்தபோது, திருகோணமலை உறுப்பினர் திரு. இரா. சம்பந்தன் எழுந்து பேச்சை ஆரம்பித்தார்.

### அமைச்சர்கள் குறுக்கீடு

ஆணையும் - நிதானமும் நிறைந்த அவரது பேச்சின் பல கட்டங்களில் அமைச்சர்கள் குறுக்கிட்டார்கள்.

எப்போதுமே இச்சபையில் மிகத் தெளிவாகவும் அல்லது உண்மையென்று நம்பத்தக்க விதத்திலும் பேசும் வர்த்தக அமைச்சர்; தெளிவற்ற நிலையில் உரையொன்றை ஆற்றியிருப்பது இன்றுதான் முதற் தடவை என்று தன்னுடைய பேச்சின் ஆரம்பத்திலேயே கூறினார் திரு. சம்பந்தன்!

மாவட்ட; மாஜிஸ்திரேட் நீதிமன்றங்களுக்கு வழக்கு ஒன்றை விசாரித்து, தீர்ப்பையும் அளிக்கும் அதிகாரம் உள்ளபோது, அவ்வழக்குத் தொடர்பாக பிணைவழங்குவதற்கு மாத்திரம் அந்நீதிமன்றங்கள் அதிகாரமற்றன என்பது எவ்வாறு பொருந்தும்) என்பதே திரு. சம்பந்தனின் வாதமாகும்.

ஒரு கட்டத்தில் கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் பிரதி அமைச்சர் திரு. டெல்சின் பெர்ணாண்டோ குறுக்கிட்டு [அவரும் ஒரு வழக்கறிஞர்.]

'இன்றுகூட மாஜிஸ்திரேட் நீதிமன்றங்கள் கொலைக் குற்றத்துக்கு 3 மாதங்கள் சென்றாலொழிய பிணைவழங்க முடியாது'என்று கூறவும் திரு சம்பந்தன் –

'என்னுடைய வாதம் என்ன என்பது பிரதி அமைச்சருக்குப் புரியவில்லை' என்று சொல்லவும் பிரதி அமைச்சர், 'ஏன்?'- என்றார்.

'தயவுசெய்து கொஞ்சம் பொறுங்கள்; நான் மீண்டும் கூறுகிறேன்; அப்போது நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என்று நினைக்கிறேன்'-என்று திரு. சம்பந்தன் கூறவும், சுதந்திரக்கட்சியைச்சேர்ந்த ஹரிஸ்பத்துவ இரண்டாவது உறுப்பினர் திரு.ஆர். பி. விஜயசிறி எழுந்து –

'அவர் [பிரதி அமைச்சர்] பரீட்சையில் மாத்திரம் சித்தியடைந்திருக்கிறார், அவ்வளவுதான்!'- என்றார்.

இச்சட்டமூலம் நிறைவேற்றப்படின் முழுநாடுமே எம்மைப் பார்த்துச் சிரிக்குமென்றும் திரு. சம்பந்தன் தனது விவாதத்தில் கூறினார்.

இத்தகைய மாற்றங்கள் கொண்டுவரப்படுவது இது தான் முதற்தடவை என்று கருதுகிறீர்களா? என்று திரு. காமினி திசநாயக்கா கேட்கவும்; முதற்தடவையா பத்தாவது தடவையா! என்பதில் எனக்கு அக்கறையில்லை; ஆனால் ஒவ்வாதவை நிறுத்தப்பட வேண்டுமென்பதே எனது வாதமென்றும், நாம் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் எமது கருத்தை வலியுறுத்த நாம் கடமைப்பட்டிருக்கிறோமென்றும் கூறியவர் குற்றச்செயல்கள் அதிகரிப்பின் உண்மையான காரணம் பொதுமக்களுக்குப் பொலிசார் மீது நம்பிக்கையற்றுப்போனதும் பொலிசார் துப்புக்களை அறிவதில் கையாளும் முறைகளுமே என்றார்.

திரு. சம்பந்தனை அடுத்து கம்பஹா உறுப்பினர் திரு எஸ். டி. பண்டாரநாயக்கா [சு. க.] பேச ஆரம்பித்ததும் அரசாங்க பின்வரிசை உறுப்பினர்கள் சற்று உசாரடைந்து காணப்பட்டனர்; பலதடவைகளில் குறுக்கிட்டனர்.

திரு. பண்டாரநாயக்கா குறுக்கீடுகளுக்குச் சிரித்துக் கொண்டே பேசிக்கொண்டிருந்தாலும் பலதடவைகளில் அவற்றுக்கு இடமளியாமல் உணர்ச்சிவசமாகவும் பேசிக் கொண்டிருந்தார்.

### சி. ஐ. டி. பொலிசாரா சட்டமூலத்தைத் தயாரித்தனர்

குற்றவியல் நீதி ஆணைக் குழுக்கள் சட்டமூலத்தை முன்னைய சட்டமா அதிபர் திரு. விக்டர் தென்னக்கோனே தயாரித்தார் என்று திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இப்போது கூறுகிறார். இன்று நீங்கள் கொண்டுவரும் இதே சட்டமூலத்தை உங்களுக்குத் தயாரித்துத் தந்தவர்கள்-யார் சி. ஐ. டி. பொலிசாரா என்று கேட்டார் அவர்.

1971-ம் ஆண்டு பொலிசார் இளைஞர், யுவதிகளின் கை, கால்களை நொறுக்கிச் சித்திரவதை செய்தார்கள். மீண்டும் அவர்களுக்குச் சந்தர்ப்பத்தை அளிக்கப்போகிறீர்களா? பிணை பெறுவதற்கு உயர்நீதிமன்றம் செல்ல ஏழைமக்களால் முடியுமா என்றும் அவர் கேட்டார்.

தான் சிறையிலிருந்த போது பிரதமர் திரு பிரேமதாசா மட்டுமே தம்மை வந்துபார்த்ததாக சபையிலிருந்த பிரதமரைக் காட்டி அவர் குறிப்பிட்டபோது சபை ஆரவாரப்பட்டது!

அச்சமயமே திருமதி சிறிமாவோ சபையினுள் பிரவேசிக்கவும்,-

### சிறை வைத்த பிரதமர்

'உங்களைச் சிறை வைத்த பிரதமர் வருகிறார்'- என்று கூச்சல்கள் எழுந்தன.

அரசாங்கத்தைச் சேர்ந்த மற்றொரு பிரபல வழக்கறிஞரான நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா பேசிக்கொண்டிருந்தபோது கூட்டணி உறுப்பினர்களுக்கும் அவருக்குமிடையே பலதடவைகளில் குறுக்கீடுகள் எழுந்தன.

### உயர் நீதிமன்றமா? பிணை நீதிமன்றமா?

''உயர் நீதிமன்றம் சிறந்த அதிகாரம் வாய்ந்தது என்பதை நீங்கள் மறுக்கிறீர்களா?'' என்று ஒரு கட்டத்தில் அமைச்சர் கேட்கவும் பருத்தித்துறை உறுப்பினர் திரு. க. துரைரத்தினம்—

''அதற்காக உயர் நீதிமன்றத்தை பிணை நீதி மன்றம் ஆக்கப்போகிறீர்களா?'' என்று கேட்கவும் சபையில் பலத்த சிரிப்பொலி எழுந்தது.

### பொலிசாரின் தவறான நடவடிக்கையை ஏற்கிறோம்

குற்றச்செயல்களைத் தொழிலாகக்கொண்டவர்களை ஒழிப்பதற்காகவே நாம் இதனைக்

[4-ம் பக்கம் பார்க்க]

## ஷா கமிஷன் விசாரணை:

# எவர் மீதும் பழிவாங்கும் நோக்கம் அரசுக்கு இல்லை

### சாந்திபூஷண் கருத்து

பெங்களூர், மே. 23 திருமதி இந்திராகாந்தியின் ஆட்சிக்காலத்தில் நெருக்கடி நிலை அமுலிலிருந்தபோது இடம் பெற்றதாகக் கூறப்படும் அத்து மீறிய செயல்கள் குறித்து விசாரணை நடத்திய ஷா கமிஷனின் அறிக்கை மீது அரசு தேவையான சட்டநடவடிக்கையை மேற்கொள்ளும்.

இவ்வாறு சட்டஅமைச்சர் திரு. சாந்திபூஷண் பெங்களூரில் தெரிவித்தார்.

ஷா கமிஷன் அறிக்கையின் பிரகாரம் அரசு எடுக்கும் சட்ட நடவடிக்கையை பழிவாங்கும் நோக்குடன் நோக்கக்கூடாது எவரையும் பழிவாங்கும் நோக்கமும் அரசுக்கு இடையாது என்றும் திரு. சாந்திபூஷண் தெரிவித்தார்.

இந்த அறிக்கை மீது சட்ட நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் எவருக்கேனும் தண்டனை வழங்கப்பட்டால் அது அவரது குற்றத்தை அம்பலப்படுத்துமே செயலே அது என அர்த்தம் ஒழிய, அரசு அவர் மீது மேற் கொள்ள முடியாது என்றும் கொண்ட பழிவாங்கும் அவர் கூறினார். (இ)

## தென் லெபனான் பகுதிகளிலிருந்து

# இஸ்ரேல் துருப்புக்கள் அடுத்தமாதம் வெளியேறும்

### தயான் உறுதி

ஜெருசலம், மே. 23 தெற்கு லெபனானில் ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து அடுத்தமாதம் 13-ம் திகதியுடன் சகலதுருப்புக்களும் முற்றாகவெளியேறிவிடுமென்று இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் மோஷே தயான் உறுதி கூறியுள்ளார் இதேவேளை, ஐ. நா. சமாதானப் படையினர் கண்காணிப்பில் இருக்கும் தென் லெபனான் பகுதிகளில் கொரில்லாக்கள் தொடர்ந்து ஊடுருவல் நடத்தும் பட்சத்தில் அக் கொரில்லாக்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப் படும் என்று ஐக்கியநாடுகள் சபை இஸ்ரேலுக்கு உறுதி அளித்துள்ளது. (இ)

## பேகம் பூட்டோவுக்கு

# மேலும் 3மாத வீட்டுக்காவல்

இஸ்லாமாபாத், மே 23 முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் ஜுல்பிகார் அலி பூட்டோவின் மனைவி பேகம் பூட்டோ மேலும் மூன்று மாதகாலம் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

பத்திரிகை நிருபர்களோ, வெளிநாட்டுப் பிரதிநிதிகளோ வேறு எவருமோ இவரைச் சந்திக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் இராணுவ அரசு அறிவித்துள்ளது.

இவர் பற்றிய செய்திகளை வெளியிடுவதற்கு வெகுஜன தொடர்புச் சாதனங்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. (இ)

## வவனியாப் பகுதியில் துப்பாக்கிகள் பறிமுதல்

# பிரதமரை எம். பி. நேரில் சந்திப்பார்

(வவுனியா)

வவனியா பகுதியில் உள்ள விவசாயிகளிடமிருந்து அனுமதிப்பத்திரமுள்ள துப்பாக்கிகளை பொலிசார் கைப்பற்றி வருகின்றனர்.

விவசாயிகளிடமிருந்து பெற்ற துப்பாக்கிகளை திரும்பவும் ஒப்படைக்கும்படி வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் ஜனாதிபதியையும், பிரதமரையும் கேட்டுள்ளார்.

துப்பாக்கியை பொலிஸார் கைப்பற்றுவதால் சுமார் 70,500 ஏக்கர் விவசாயம் அழிந்து போகக்கூடிய நிலையிலிருப்பதாக எம். பி. சுட்டிக் காட்டியுள்ளார்.

வவுனியா எம். பி. இது தொடர்பாக பிரதமரை நேரில் சந்திக்கவிருக்கிறார். (ஏ)

# திறந்தபடி பாண் கொண்டு சென்றவர்களுக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத்துக்கு அமைவின்றி விற்கும் வகையில் பாணை மூடாமல், சுகாதாரமற்ற முறையில் விற்பனைக்குக் கொண்டுசென்ற இருவருக்கும், அடையாள அட்டை இல்லாமல் பால் விற்பனைசெய்த நால்வருக்கும், யாழ். நீதிபதி கே. வி. நவரத்தினம் அபராதம் விதித்தார்.

யாழ். மாநகரசபைஉணவுப் பரிசோதகர் திரு. குமாரகுலசிங்கம், சுகாதாரப்பகுதி மேற்பார்வையாளர்கள் திருவாளர்கள் யோசேப்அந்தோனிப்பிள்ளை, இராசா இராஜேஸ்வரன் ஆகியோர்மேற் கொண்டதிடீர் நடவடிக்கையின் பயனாக, இருவர் சுகாதாரமற்றமுறையில் பாணைக் கொண்டு சென்றதையும், நால்வர் அடையாள அட்டை இல்லாமல் பால் விநியோகம் செய்ததையும் கண்டுபிடித்து யாழ். நீதிபதி முன் ஆஜர் செய்தனர்.

எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொள்ளவே, பாணைக் கொண்டு சென்றவர்களுக்கு தலா ஐம்பது ரூபாயும்; அடையாள அட்டை இல்லாமல் பால் விற்பனை செய்தோருக்கு ரூபா இருபதும் நீதிபதி அபராதம் விதித்தார்.

பாணை சுகாதாரமற்ற முறையில் கொண்டுசென்ற குற்றத்திற்காக, முகமது அக்பரும் ஏ. ஜி. விரேமச்சந்திரனும், பால் அடையாள அட்டையில்லாமல் விற்பனைசெய்த குற்றத்திற்காக ஆ. பரசுத்திருன், பொ. செல்வராசா, மு. நாராயணன், செ. பஞ்சவர்ணம் ஆகியோரும் குற்றச்சாட்டப்பட்டனர். (கே)

## பரராசசேகரப் பிள்ளையார் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னர்களில் பக்தியானும் கீர்த்திமிக்கவனுமாகிய பரராசசேகர மன்னனால் ஸ்தாபிக்கப்பெற்ற இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவிலின் வருடாந்த விழா இம்மாதம் 29ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது. பன்னிரண்டு தினங்கள் தொடர்ந்து விழாக்கள் நடைபெறும்.

அடுத்தமாதம் 6ம் திகதி பெரிய சப்பரத் திருவிழாவும் 7ம் திகதி தேர்த் திருவிழாவும், 8ம் திகதி தீர்த்தத் திருவிழாவும், 9ம் திகதி பூங்காவனமும் நடைபெறும். (க)

## பரி.யோவான் வெற்றி

(அரியாலை)

யாழ்ப்பாணம் பரி.யோவான் கல்லூரிக்கும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்குமிடையிலான 17 வயதுக்குட்பட்டவர்களுக்கான கிரிக்கட்போட்டியில் பரியோவான் கல்லூரி முதல் இன்னிங்ஸில் வெற்றி பெற்றது.

முதல் இன்னிங்ஸில் பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டி 6விக்கட்டுகளை இழந்து 256 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. பரி.யோவான் கல்லூரி சார்பில் துடுப்பெடுத்தாடிய செல்வன் எஸ். கருணகுமார் 100 ஓட்டங்களையும், செல்வன் எம். டி. ரவீந்திரா 79 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஹாட்லி கல்லூரி 1ம் இன்னிங்ஸில் 100 ஓட்டங்களையும், 2ம் இன்னிங்ஸில் 8 விக்கட்டுகளை இழந்து 128 ஓட்டங்களையும் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. ஹாட்லிகல்லூரிக் கோஷ்டியில் விளையாடிய செல்வன் வி. ரகுராமன் 48 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்தெறிதலில் பரியோவான் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் எஸ். தனஞ்சயன் 18 ஓட்டங்களைக் கொடுத்து 8 விக்கட்டுகளையும் ஹாட்லிக்கல்லூரியைச் சேர்ந்த செல்வன் யே. எஸ். ரி. ஸ்ரீநந்தகுமார் 46 ஓட்டங்களைக்கொடுத்து 6 விக்கட்டுகளையும் கைப்பற்றினர். போட்டி ஹாட்லிக் கல்லூரியில் நடைபெற்றது. (இ)

## சட்டத்தரணி...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவருகிறோம்; பொலிசாரின் தவறான நடவடிக்கைகளைப் பற்றி எதிர்கட்சித் தலைவரும் மற்றையோரும் கூறியதை நாம் முற்றாகவே ஏற்றுக்கொள்கிறோம்; அப்படியான நிலைமை தொடராதிருப்பதற்காகவே கடுமையான சட்டங்கள் அவசியம் என்றும்; அவசரகாலச் சட்டத்தை பிரயோகிக்க நாம் விரும்பவில்லை என்றும் வாதத்தை விடுத்து இம்மசோதாவுக்கு ஆதரவை நல்கும்படியும் எதிர்க்கட்சியினரைக் கேட்ட அமைச்சர்-

### தந்தை செல்வாவின் நெருங்கிய சிஷ்யர்

தான் மதிக்கின்ற ஒரு கனவான் அமரர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் நெருங்கிய சிஷ்யரான கௌரவ எதிர்க்கட்சித்தலைவர் காந்திய தத்துவங்களே தமது கொள்கைகள் என்று கூறியவற்றை முழுமையும் ஏற்றுக் கொள்வதாகவும் வன்முறைகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு கூட்டணியினர் தங்கள் ஆதரவை நல்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

### 'சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினர் யோகேஸ்'

விவாதத்தில் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கட்டு நாயக்கா விமானநிலையத்தில் கைது செய்யப்பட்டு பொலிசாரின் சித்திரவதைக்குள்ளான பரமநாதன் விவகாரத்தை சபையில் தெரிவித்து, இவ் விவகாரம் குறித்து விசாரணை நடத்துமாறும் அமைச்சரைக் கேட்டுக்கொண்டார்.

எச்சந்தர்ப்பத்திலும் பொது மக்களுக்குப் பொலிசார் தொந்தரவு கொடுக்காதவாறு அவர்கள் வழி நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டார்.

## "அன்பே உயர்வுதரும்"

(சங்கானை)

திருமூலர் அன்பேசிவம் எனவும் மணிவாசகர் அன்பின் விளைந்த ஆரமுதேஎனவும் அன்பின் பெருமையை அறிந்து மனமுருகிப் பாடியுள்ளனர். ஆணவத்தின் வலிமைகுன்ற அதிலிருந்து அப்புறக்கும் யுத்தகளத்தில் முருகப்பெருமானை ஏளனம் செய்த சூரபத்மன் தனது ஆணவம் ஒடுங்கிய நேரம் முருகப்பெருமானை நேரில் கண்டு அன்பு கொண்டான்."

இவ்வாறு சங்கானை வெல்லில் முருகமூர்த்தி கோவிலில் "அன்பேசிவம்" என்னும் பொருள்பற்றி உரையாற்றிய திரு.ஷண்முககுமரேசன் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தொடர்ந்து கூறியதாவது: தேவர்களுக்கு மிகக்கொடுமை விளைத்த சூரனையே முருகப்பெருமான் ஆட்கொண்டாரென்றால் தினமும் தவறிழைத்துக் கொண்டிருக்கும்மானிடராகிய நாங்கள் எமது ஆணவத்தை ஒடுக்கி இறைவன்பாதாரவிந்தங்களில் அன்பை வைப்போமானால் இறைவன் கருணைகாட்டுவான்" என்றார். (உ)

## வடபகுதி

# பௌத்த பாடசாலைகளில் தமிழ்மூலம் போதனை

(நெல்லியடி)

வடபகுதிகளிலுள்ள தமிழ் பௌத்த பாடசாலைகளில் மிக விரைவில் தமிழ்மூலம் போதனைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. கரவெட்டி, அல்வாய், புத்தூர் போன்ற இடங்களிலுள்ள பாடசாலைகளிலேயே தமிழ் மூலம் போதனைகள் நடைபெறவுள்ளன.

இதற்கு முன்னோடியாக கரவெட்டி ஸ்ரீ நாரதீய வித்தியாசாலை அதிபர் வண. உள்ளலப்போல மகாநாமதேரோ வியாங்கொடைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

கடந்த ஜனவரிமாதம் கௌரவ கல்வி அமைச்சர் திரு. நிசங்க விஜரட்ண வடபகுதிக்கு விஜயம் செய்த பொழுது இதற்கான அனுமதியை வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

பெற்றோர் விடுத்த கோரிக்கையை அடுத்தே தமிழ் மூலமான போதனைக்கு கல்வியமைச்சர் அனுமதியளித்திருந்தார். (ஏ)

## கி. அ. சங்க நிர்வாகிகள்

காரைநகர் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் விசேஷ பொதுக்கூட்டம் சைவமகாசபை மண்டபத்தில் நடந்தபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஆ. கந்தையா, உபதலைவர்: திரு. அ. கனகசபை, செயலாளர்: திரு. வை. சுந்தரமூர்த்தி, உபசெயலாளர்: திரு. மு. பரமநாதன், பொருளாளர்: திரு. க. ஞானேஸ்வரன், ஏழு செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (உ)

## உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

[உடுப்பிட்டி]

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கும் யாழ். இந்துக் கல்லூரிக்குமிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 24ம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய விளையாட்டுத் திடலில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கச் செயலாளர் திரு. சா. ஜேசுதாசன் கவனித்து வருகிறார். (உ)

## அபிராமி அந்தாதி மனனப் போட்டி

(சுழிபுரம்)

வழக்கம்பரை சன சமூக பஜனைச் சபையினர் இவ்வாண்டும் வழக்கம்பரை அம்மன் கோவில் உற்சவத்தையொட்டி அபிராமி அந்தாதி மனனப் போட்டியை நடாத்தவுள்ளனர். போட்டியில் பங்குகொண்டு ஆகக்கூடுதலான பாடல்களை மனனம் செய்து ஒப்புவிப்பவர்களுக்கு பரிசுகள் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி
6-45, 10-00
ரஜனிகாந் - ஸ்ரீதேவி
நடித்த
**மூன்று முடிச்சு**

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-45
ஜெய்சங்கர்-பத்மினி
நடித்த
**பெண் தெய்வம்**

**Regal** (Jaffna)
Daily at 4-45, 7-00 and 9-30 p.m. only
**FIVE CRAZY BOYS** (Color)

**ராணி**
(யாழ். நகர்)
காட்சிநேரங்கள் குறிப்பிட முடியாமைக்கு வருந்துகிறோம்
சிவாஜி — மஞ்சுளா
நடித்த
**உத்தமன்**
(ஈஸ்ட்மன் கலர்)

சில தினங்கள் மட்டும்
**மனோகரா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - வாணிஸ்ரீ
நடித்த
**ஊருக்கு உழைப்பவன்**

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — விஜயா
நடித்த
**ராமன் எத்தனை ராமனடி**

**வின்ஸர்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா, விஜயகுமார், நிர்மலா, அசோகன்
நடித்த
**ஜானகி சபதம்**
25.5.78 முதல் சிவாஜி-மஞ்சுளா-நாகேஷ்
நடித்த
**எங்கள் தங்கராஜா** (புதிய பிரதி)

இன்று மட்டும்
**சாந்தி**
(யாழ். நகர்) போன்: 7842
தினசரி 10-30, 2-30, 6-30, 9 45
முத்துராமன், சுஜாதா, பத்மபிரியா, சோ.
**வாழ்ந்து காட்டுகிறேன்**
மே 27-28 திகதிகளில் காலை 8-30 மணிக்கு மட்டும் **Finist the Falcon**
26ம் திகதி முதல் எம். ஜி. ஆர். **ராமன் தேடிய சீதை**
புத்தம் புதிய பிரதி

**ஸ்ரீதர்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள் வெற்றிகரமான 3வது வாரம்
முத்துராமன் — சத்திரகலா
நடித்த
**காலங்களில் அவள் வசந்தம்**
உலகச் செய்திகளும் காண்பிக்கப்படும்
(கலர்)
Also Showing World news in colour

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
**கிரகப்பிரவேசம்** (கலர்)

**விடேரா**
போன்: 7692
ஏ. வி. எம். ராஜன், பானுமதி
(யாழ். நகர்)
**பூவும் பொட்டும்**


கூட்டுறவு இயக்க மறுசீரமைப்பு:

# கமிட்டி விசாரணை யாழ். நகரில் நாளை ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

கூட்டுறவு இயக்கத்தின் மறுசீரமைப்புப் பற்றிய கமிட்டி விசாரணை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நாளை பிற்பகல் 2-30 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து 4 தினங்கள் நடைபெறும்.

நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ தேவநாயகம் தலைமையிலான இக்கமிட்டியில் ஜனாப் எம். எல். எம். அபுசாலி [பலாங்கொடை எம். பி.], திரு. கே. அபயவிக்கிரம [தெனியாய எம். பி.], திரு. ஜி எம். பிரேமசந்திர (மாவத்தகம எம். பி.], திரு. பி. ஈ. வீரமன். [முன்னைநாள் கூட்டுறவு ஆணையாளரும், சர்வதேச கூட்டுறவு இயக்க முன்னைநாள் வலய காரியால பணியாளரும்] திரு. ஆர். டி. மெல் [1970ம் ஆண்டு அரச கூட்டுறவு விசாரணை சபை உறுப்பினர்] இடம் பெற்றுள்ளனர். திரு ஏ. ஈ. பெர்னாண்டோ இக்கமிட்டிச் செயலாளராகக் கடமையாற்றுவார்.

கீழ்க்காணும் 8 விஷயங்களை விட்டுப் பொதுமக்களிடமும் கூட்டுறவு நிறுவனங்களிடமும் தகவுரைகளைப் பெற்று இதுசம்பந்தமாக மகஜர்கள் அனுப்பியவர்களிடம் வாய்மூலம் தகவுரைகளைப் பெற்று அமைச்சுக்குச் சிபார்செய்வதற்கு இக் கமிட்டி கூடுகிறது.

1. கூட்டுறவுச் சங்கங்கள் திறமையுடன் இயங்குவதற்குத் தடையாக இருக்கும் முக்கிய பிரச்னை பற்றி எடுத்துக் காட்டுதல்.

2. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அளவு அங்கத்துவம் நோக்கம் சம்பந்தமாகப் பிரேரணை சமர்ப்பித்தல்.

3. நுகர்வு விஷயத்தில் தனியான ஒரு கூட்டுறவுச்சங்கத்தை ஏற்படுத்தப்படவேண்டிய அவசியம் உண்டா என்பது பற்றி ஆராய்வதுடன் கூட்டுறவுச் சட்டங்கள் பிரமாணங்கள் மாதிரி உபவிதி எனியவற்றில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென்பது சம்பந்தப்பட்ட குறிப்பான பிரேரணைகளைச் சமர்ப்பித்தல்.

(4) விவசாயம், உற்பத்தி, சந்தைப்படுத்தல், கடன் கொடுத்தல் என்பனவற்றில் ஈடுபட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்தல், வளர்ச்சியடையச்செய்தல் என்பவற்றிற்கான வழிவகைகளைத் தெரியப்படுத்தல்.

5. மாவட்ட அபிவிருத்திச் சபையின் திட்டங்கள், காணிச் சீர்திருத்த சபையின் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற அபிவிருத்தித்திட்டங்களிலும், கூட்டுறவு இயக்கத்திற்கு ஏதாவது குந்தகம் விளைவிக்கப்பட்டிருப்பின் அதுபற்றி அறிக்கை கொடுத்தல்.

6. கூட்டுறவுக்கல்வி பயிற்சி விஷயங்கள், ஆலோசனை என்பன சம்பந்தமாகத் தற்பொழுதுள்ள வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான, விரும்பத்தக்கமாற்றங்களை வெளிப்படுத்தல்.

7. கூட்டுறவு இயக்கத்திற்குப் புத்துயிரளித்தல், மறுசீரமைப்பு என்பன தொடர்பான ஏனைய விஷயங்களையும் கருத்துக்களையும் வெளிப்படுத்தல்.

8. கூட்டுறவு இயக்கத்தினை அபிவிருத்தி செய்தல் சம்பந்தமாகத் தேசிய கூட்டுறவு சபை ஏனைய தன்மைக் கூட்டுறவு நிறுவனங்கள், கூட்டுறவுத் திணைக்களங்கள், மத்தியவங்கி, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், கூட்டுறவு முகாமை சேவைகள் நிலையம், கூட்டுறவு வேலையாளர் சேவை ஆணைக் குழு என்பன எந்தஅளவு பங்கு கொள்ளவேண்டும் என்பன பற்றிக் கருத்துத்தெரிவித்தல்.

(ஈ-அ)

## காணிகளைப் பதிவுசெய்யக் கோரிக்கை

[பண்டத்தரிப்பு]

தொல்புரம் கிரிமலை கமநலச் சேவை நிலையங்களின் பிரதேச எல்லைக்குள் இருக்கும் காணிகளின் இடாப்புகள் புதிதாகத் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இப் பகுதியிலுள்ள விவசாயிகள் அனைவரும் தங்களுக்குச் சொந்தமான அல்லது குத்தகை உரிமையுடைய காணிகள் அனைத்தையும் அப் பகுதி பயிர்ச்செய்கை உத்தியோகத்தரிடம் சென்று பதிவு செய்து தங்களது விவசாய உரிமைகளை உறுதிப்படுத்துமாறு தொல்புரம் கிரிமலை கமநலச்சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் சகல விவசாயிகளையும் வேண்டியுள்ளார்.

தங்களது காணிகளைப் பதிந்துகொள்ளத் தவறும் விவசாயிகளின் விவசாய உரிமைகள் உறுதிப்படுத்தப்படமாட்டாது என்றும் ஆகவே இம் மாதம் 25ம் திகதிக்கு முன்னர் காணிகளைப் பதிந்து கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


**Rio** (Jaffna)
Phone: 7607
Daily 4 shows
James Coburn &
James Mason
in
**Cross of Iron**


# சங்கங்களை கமிட்டி சனி காலை பார்வையிடும்!

## எம். பி. க்களும் சாட்சியமளிப்பர்

(யாழ்ப்பாணம்)

நாளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகும்கூட்டுறவுக் கமிட்டி முன்னிலையில் இம்மாதம் 28ம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கமும் 10 எம். பிக்களும்சாட்சியமளிப்பார்கள்.

நிதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் தலைமையிலான இக் கமிட்டி இம் மாதம் 27ம் திகதி காலை கூட்டுறவு சங்கங்களை நேரில் பார்வையிடும்.

விசாரணை நாளை ஆரம்பமாகி 28ம் திகதிவரை தொடர்ந்து நடைபெறும்.

**சாட்சியமளிப்போர்**

**விபரம்**

**25-5-78 காலை 9 மணி**

வடபிரதேசக்கூட்டுறவு சபையினர் சாட்சியமளிப்பர்.

திரு. வி. கந்தையா (தலைவர் தேசியகூட்டுறவுச்சபை யாழ்ப்பாணம் தலைவர், பண்டத்தரிப்பு ப. நோ. கூ. ச.

**26-5-78 காலை**

தலைவர் மானிப்பாய் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம்.

தலைவர் வடபகுதி மீன்பிடியாளர் கூட்டுறவு சமாசம்.

திரு. மார்ட்டின் செல்லையா (ஏழாலை தெற்கு).

தலைவர் கூட்டுறவுப் பணியாளர் தொழிற் சங்கம்.

திரு. எஸ். மயில்வாகனம் (இளைப்பாறிய கூட்டுறவு பரிசோதகர்)

திரு. வி. பாலசிங்கம் (அல்வாய் சமூகசேவை லீக்)

**பிற்பகல் 2 மணி**

தலைவர் தேசிய கூட்டுறவு சபை, பரந்தன்.

திரு. ரி. இராசரத்தினம் ]இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்.]

திரு தம்பு [மாதகல்.]

**27-5-78 காலை**

குழு கீழ்க்காணும் சங்கங்களைப் பார்வையிடும்.

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

பண்டத்தரிப்பு பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம்;

பண்டத்தரிப்பு மீனவர் கூட்டுறவுச் சங்கம்.

கோண்டாவில் தென்னை பனம் பொருள் கூட்டுறவு உற்பத்திச் சங்கம்.

**பிற்பகல்**

திரு. எஸ். செல்லத்துரை.

டாக்டர் எஸ். ரி. சம்பந்தர்

திரு. ஏ. அன்ரனி (செயலாளர், துறைமுக சேவை கூட்டுறவுச் சங்கம்)

திரு. வி. வேலுப்பிள்ளை (நெறியாளர், வலி கிழக்கு வடபகுதி ப. நோ. கூ. ச)

**28-5-78 காலை**

கீழ்க்காணும் 11 வடபகுதி எம். பிக்கள் சாட்சியமளிப்பார்கள்.

திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை (கோப்பாய்)

திரு. வி. யோகேஸ்வரன் (யாழ்ப்பாணம்)

திரு. கி. ராஜலிங்கம் (உடுப்பிட்டி)

திரு. எம். சிவசிதம்பரம் (நல்லூர்)

திரு. ஏ. அமிர்தலிங்கம் (எதிர்க்கட்சித் தலைவர், காங்கேசன்துறை)

திரு. ரி. திருநாவுக்கரசு (வட்டுக்கோட்டை)

**பிற்பகல்**

திரு. வி. தருமலிங்கம் (மானிப்பாய்)

திரு. வி. என். நவரத்தினம் (சாவகச்சேரி)

திரு. கே. துரைரத்தினம் (பருத்தித்துறை)

திரு. வி. ஆனந்தசங்கரி (கிளிநொச்சி)

பண்டிதர் க. பொ. இரத்தினம் (காங்கேசன்துறை)

கமிட்டி விசாரணைக்கான ஏற்பாடுகளை, யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளரும், யாழ். தேசிய கூட்டுறவு சபையும், செய்துள்ளன.

சன்சோனி கமிஷன் விசாரணை:

# கடைக்கு பெற்றோல் குண்டு வீசப்பட்டது

## இருவர் எரிந்து மாண்டனர்

## வத்துகாமம் கடைக்காரர் சாட்சியம்

(கண்டி)

"கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 20ம் திகதி நானும் எனது மனைவி பிள்ளைகளும், வத்துகாமம் பொலிஸ் நிலையத்தில் தங்கி இருந்தோம். எனது கடையில் வேலைபார்க்கும் இளைஞர்களையும் எனது தம்பியையும் தவிர, மற்றவர்கள் அனைவரும் பொலிஸ் நிலையத்துக்கு வந்தனர். தம்பியும் இளைஞர்களும் எங்கே என்று அவர்களிடம் ஆவலுடன் நான் கேட்டபோது, அவர்கள் மௌனம் சாதித்து கண்ணீர்விட்டனர். என்ன நடந்தது என்று திருப்பிக்கேட்டேன். ஐயோ... அவர்களைக் கொன்றுவிட்டனர்...'' என்று கூறினர்''

இவ்வாறு நேற்று, சன்சோனி கமிஷன் முன்னிலையில் வத்துகாமம் நடாரி அம்பெலியைச் சேர்ந்த வையாபுரிப்பிள்ளை சுப்பிரமணியம் (47 வயது) சாட்சியமளிக்கையில் கூறினர்.

வையாபுரிப்பிள்ளை சுப்பிரமணியம் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

### 19ம் திகதி 11மணிக்கு

"எனது கடை வத்துகாமத்தில் இருந்தது. எனது கடையில், ஹரிஸ்பத்துவ 2வது எம். பி. திரு. விஜயசிறியின் தம்பியாருக்குச் சொந்தமான ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும் இருந்தன.

"வழக்கம்போல ஆகஸ்ட் 19ம் திகதி காலை கடையைத் திறந்தேன். வியாபாரமும் வழக்கம்போல நடந்துகொண்டிருந்தது.

"அப்போது, கண்டியில் கலவரம் என்று கூறினார்கள்.

"பகல் பதினொருமணியளவில் பொலிஸ் ஜீப்பில் வந்த இன்ஸ்பெக்டர், ஊரடங்குச் சட்டம் அமுல்செய்யப்படப் போகிறது என்றும் கடையைப் பூட்டுமாறும் கூறினர்.

"கடையிலுள்ளவர்களைக் கவனமாக இருக்குமாறு கூறிவிட்டு நான் எனது வீட்டுக்குச்சென்று, சாப்பிட்டு விட்டு நித்திரையாகிவிட்டேன்.

"மாலை சுமார் 6-30 மணியிருக்கும். வெடிச் சத்தங்கள் கேட்டன. திடீரென மின்சாரம் துண்டிக்கப்பட்டது. எனது வீட்டு யன்னல் வழியாக நகரத்தைப் பார்த்தேன்.

### கடைகள் எரிந்தன

"மூன்று கடைகள் எரிந்து கொண்டிருந்தன. எனது கடையும் எரிந்து கொண்டிருந்தது.

"பயத்தினால் எனது மனைவியும் பிள்ளைகளும் அழுது கொண்டிருந்தனர். நான் அவர்களுக்கு ஆறுதல் கூறிக்கொண்டே, என்ன நடந்தது என்று தெரியாமல், எனது வீட்டுக்கு அருகிலுள்ள துரைச்சாமி வீட்டுக்குச் சென்றேன்.

### பெற்றோல் குண்டுகள்

"எனது கடைக்கு முன்பாக ஒருபொலிஸ் ஜீப்பும், காரும் நின்றன. ஆங்கிலப்படங்களில் வரும் காட்சிகள்போல, எனது கடையை நோக்கி பெட்ரோல் குண்டுகள் வீசப்பட்டன. கடைமுழுவதும் எரிந்துகொண்டிருந்தது.

### இருவர் எரிந்து மாண்டனர்

"இதன் பின்னர் ஆகஸ்ட் மாதம் 20ம் திகதி நானும் மனைவி பிள்ளைகளும் வத்துகாமம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றோம். அங்கு தங்கினோம். எனது கடையிலிருந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி அப்போது ஒன்றும் தெரியாது. 20ம் திகதி சிறிதுநேரம் கழித்து எனது கடையில் வேலைபார்த்த சிலர் பொலிஸ் நிலையத்துக்கு வந்தனர். அவர்களில் எனது தம்பி லோகநாதன், கிளாக்கர் சத்தியவேல் ஆகியோரைக் காணவில்லை. வந்தவர்களிடம் விசாரித்தேன். கண் கலங்கிய வண்ணம் மௌனம் சாதித்தனர். என்ன நடந்தது என்று திருப்பிக்கேட்டேன். அவர்களைக் கொன்றுவிட்டார்கள் என்று கூறி அழுதனர்.

### ஐயோ முருகா...

"கடை எரிந்துகொண்டிருந்தபோது செய்வதறியாது தாங்கள் திகைத்துக்கொண்டிருந்ததாகவும், அந்த நேரம் ஒரு பக்கத்திலிருந்து "ஐயோ ...முருகா..." என்ற முனகல் சத்தம் கேட்டதாகவும் அங்கு சென்று பார்த்தபோது அவர்களிருவரும் தீயில் வெந்து இறக்கும் தறுவாயிலிருந்ததாகவும் எனது கடைக்காரர்கள் கூறினார்கள். எனது தம்பியும் கடைக் கிளாக்கரும் தீயில் கருகி மாண்டுவிட்டனர்'' என்று வையாபுரிப்பிள்ளை சுப்பிரமணியம் தமது சாட்சியத்தில் கூறினர்.

### விசாரணைக்கு முன்னர்

நேற்று கமிஷன் விசாரணை ஆரம்பமாவதற்கு முன்னர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிசார்பாகத் தாம் ஆஜராவதாகக் குறிப்பிட்ட சட்டத்தரணி திரு கங்காரா!

"தேசிய அரசுப் பேரவையில் காணி விவசாய அமைச்சர் திரு. ச. எல். சேனநாயக்கா, ஆகஸ்ட் வன்செயலில் கண்டியில் ஏற்பட்ட சம்பவங்களில் முன்னாள் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் சம்பந்தப்பட்டிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த விபரங்கள் 'ஹன்சார்ட்'டில் வெளிவந்துள்ளன. அவர்கள் நலனைக்கவனிக்கும் பொருட்டு நான் இங்கு ஆஜராகியுள்ளேன்'' என்று கமிஷனிடம் தெரிவித்தார்.

## சுவரொட்டியில் வேறுபட்ட விளக்கம்

(யாழ்ப்பாணம்)

வன்செயல்கள் தொடர்பாக தேடப்பட்டுவரும் முப்பத்தெட்டு இளைஞர்கள் பற்றிப் புகைப்படங்களுடன் வெளியிடப்பட்டுள்ள இரண்டாவது சுவரொட்டி விளம்பரத்தில் தமிழ், ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களுக்கும் சிங்களத்தில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களுக்குமிடையில் நிறைய வேறுபாடு இருப்பதாக யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் நேற்றுக்காலை சுவரொட்டி விளம்பரம் பிரதியொன்றை கையில் வைத்துக்கொண்டு தம்மைச் சூழ்ந்துநின்றவர்களிடம் கூறிக்கொண்டிருந்தார்.

சுவரொட்டி விளம்பரத்தில் சந்ததியாரின் படத்தின்கீழ் தமிழிலும் ஆங்கிலத்திலும் சுழிபுரம் என்ற விலாசம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் சிங்களத்தில் எதிர்க்கட்சித் தலைவரின் வீட்டிலிருந்து மூன்றுமைல் தூரத்திற்குள் வசிப்பவர் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறதென்றும் அவர் சுட்டிக்காட்டினர்.

## யாழ். நகரிலிருந்து—

[1-பக்கத் தொடர்ச்சி]

யனில் யாழ் பொலிஸ் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. ரெரன்ஸ் பெரேரா தலைமையில் ஒரு பொலிஸ் வானும், இரண்டு பொலிஸ் ஜீப்புகளும் கோப்பாய் எம். பி.யின் இல்லத்திற்கு வந்து சேர்ந்தன. சுவரொட்டி விளம்பரம் பிரதிகள் இரண்டை எடுத்து, அங்குள்ள இளைஞர்களுடன் சரிபார்த்து, அவர்களைப் பொறுப்பேற்றுக் கொண்டு பொலிஸ் வானும், ஜீப்புகள் முன்னும் பின்னுமாகப் புறப்படும்போது சரியாக காலை 10 மணியாயிற்று.

### 'நல்ல நேரமா ராகு காலமா?'

இச்சமயம் கடிகாரத்தைப் பார்த்த ஒருவரிடம் திரு. யோகேஸ்வரன், தமாஷாக "நல்ல நேரமா, ராகுகாலமா?" என்று கேட்டார்.

### சிரித்த முகத்துடன்

பொலிஸ் வாகனங்களில் ஏறிய அத்தனை இளைஞர்களும் சிரித்த முகத்துடன் உற்சாகமாகவே சென்றனர். அவர்களை வழியனுப்பிவைக்க வந்தவர்கள் சிலர் மட்டும் கண்ணைத் துடைத்துக்கொண்டனர்.

பொலிஸ் வானில் சாரதியின் அருகேயுள்ள ஆசனத்தில் மாணவ சேனாதிராஜா அமர்ந்திருந்தார்.

கிருபாகரன் என்ற இளைஞர் ஏற்கனவே பொலிஸாரால் விசாரணைக்குள்ளாகி விடுவிக்கப்பட்டிருந்தாராயினும் அங்கும் 'தேடப்படுபவருள்' ஒருவரானதால் மீண்டும் அவரும் கொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளார்.

## இன்று பெற்றோர் ஆசிரியர் சங்கம் கூடுகிறது

(வேலணை)

மண்டைதீவு மகாவித்தியாலயப் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டம், இன்று வித்தியாலய மண்டபத்தில் அதிபர் சு. சண்முகநாதன் தலைமையில் நடைபெறுகிறது.

## ஞானசம்பந்தர் குருபூசை விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். சைவசமய அபிவிருத்திக்கழகத்தினரால் நடாத்தப்படும் திருஞானசம்பந்தர் குருபூசைவிழா, இன்றிரவு வண்ணை சாத்தையர்மடம் கற்பகவிநாயகர்கோயில் மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

அபிஷேக ஆராதனை, பஜனை, கந்தபுராண பாராயணம், நாயன்மார்களின் திருவுருவப்படம் உள்வீதி வலம்வருதல் ஆகியவற்றுடன் யாழ். வளாகப் புவியியல் பகுதி உதவி விரிவுரையாளர் திரு. த. சிவதட்சணாமூர்த்தியின் "பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே' என்னும் தலைப்பில் சொற்பொழிவும் இடம்பெறும். (செ)

செங்ஜோன்ஸ்

## வருடாந்தப் பரிசளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்புவிழா இம்மாதம் 26ந் திகதி நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாண ஆச்டீக்கன் அருட்திரு சாம். ஹோர்லிக்டன் அடிகள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பரிசளிப்பு உரையை இலங்கைத்திருச்சபையின் கொழும்பு ஆயர் அதிவணக்கத்துக்குரிய சுவீதின் பெர்ணாண்டோ அடிகள் நிகழ்த்துவார்கள். திருமதி பெர்ணாண்டோ பரிசில்கள் வழங்குவார்.

கல்லூரி அதிபர் திரு. சி. ஈ. ஆனந்தராசா கல்லூரியின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பார். (இ)

## நாட்டை—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி அமைச்சர் [illegible], நேற்று முன்தினமிரவு சினன்குடாவில் நாட்டினார். இந்த அடிக்கல்நாட்டு விழாவில் பேசுகையில்தான் அமைச்சர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

"பயங்கரவாத நடவடிக்கைகளை இந்த நாட்டிலிருந்து ஒழிக்க அரசு திட்டமிட்டுள்ளது'' என்று குறிப்பிட்ட அமைச்சர்; பிரிவினை முயற்சிகளுக்கு எதிராக அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவித்தார்.

# "சமுதாயம் சிறப்புற தனிமனிதன்வாழ்வு உயரவேண்டும்''

— தெ. பொ. மீ.

(யாழ்ப்பாணம்)

"சமுதாயம் சிறப்புற்று சீர்மைபெறவேண்டுமாயின், தனிமனிதன் வாழ்வு உயர வேண்டும். தனிமனிதன் சமுதாயத்தைவிட்டு வாழமுடியாதவன். மனிதன் பிறக்கும் போதே தாய், பிள்ளை என்ற பிணைப்போடுதான் பிறக்கின்றான், பின்னர் சுற்றம், சூழல், உறவு, உலகம் இவ்வாறு ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து வாழ்வதே மனித வாழ்வாகும்.

எனவே தனிமனித வாழ்வு உயருகின்றபோது ஒரு சமுதாயத்தில் உயர்வு ஏற்படுகிறது''

இவ்வாறு நேற்றுமுன்தினம் இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாகத்தில் இடம்பெற்ற "திருவள்ளுவரும் இக்காலத்திற்கேற்ற குறிக்கோள்களும்'' என்ற பொருள்பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

"யாழ்ப்பாணத்தில் வாழுகின்ற தமிழ்மக்கள்முன் பேசுவதற்கு வாய்ப்புக்கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். நான் பிறந்தபோது இந்த உலகம் எத்துணை துன்பத்திற்கு ஆளாகி இருந்ததோ அதைவிட ஆழமான அவலமான துன்ப அலைகளில் இந்த உலகம் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. இந்தத் துன்ப அலைகளில் உலகம் - கல்வி உலகம் - தமிழுலகம் உழன்று அல்லல்படுகின்றது. 78 வயது வாழ்க்கை வாழ்ந்தும் இறந்த பயனை இந்த உலகிற்கு நிறைவேற்றமுடியாமற் போகின்றோமே என்ற உணர்வுதான் ஏற்பட்டது.

குறிக்கோள் உலகம் என்பது வேறுபாடற்ற- உயர்வு தாழ்வற்ற ராமராச்சியத்தைப் போன்றதாக அமையவேண்டும்.

தனிமனித உயர்வினால் சமுதாயம் சிறப்புற்று உயர்வுற்று எழுச்சிபெறவேண்டும். தனிமனிதன் சமுதாயமாகி சமுதாயம் நாடாக, நாடுகள் சாம்ராஜ்யங்களாக உருவாக வேண்டும். இத்தகைய வளர்ச்சிக்கு அன்பு- நட்பு- சகோதரத்துவம்- பணிவு- கருணை எனும் நம்மீது இயல்பாகவே ஏற்படவேண்டியவை." [கா]

## பொலிஸ் அதிபர் சண்முகம் இன்று சாட்சியம்

[கண்டி]

சன்சோனி கமிஷன்முன் இன்று காலை கூடும்போது நுவரெலியா மாவட்ட பொலிஸ் அதிபர் திரு. சண்முகம் சாட்சியமளிப்பார்.

பொலிஸ் அதிபர் திரு சண்முகம் நேற்று சாட்சியமளிப்பார் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

## வாராந்தக் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வாராந்தக் கருத்தரங்கு எதிர்வரும் சனிக்கிழமை மாலை கூட்டணிப் பணிமனையில் யாழ்ப்பாண எம். பி. திரு. வெ யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இவ்வாரக் கருத்தரங்கில் "பாரினில் இல்லாமிய இனவெறியா?'' என்ற தலைப்பில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரெத்தினம் மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் கோவை மகேசன் உட்பட பலர் உரையாற்றுவர். [செ]

## பக்திப்பாடலும் வில்லிசையும்

(புலோலி)

தென் புலோலி, சாரையடி வீரபத்திரர் ஆலயத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இரவு பக்திப்பாடல்களும், வில்லிசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

பக்திப்பாடல்களை 'பக்திப் பாடல் அரசு' திரு. ஏ. ஆர். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியும் "கானமிர்தன்'' மட்டுநகர் திரு. ஜி. பாலசுப்பிரமணியமும் பாடுவார்கள். இலங்கை கலைவாணர் வில்லிசைக் குழுவினர் கலாவினோதன் கே. என். கணபதிப்பிள்ளையின் "தீர்க்க சுமங்கலி'' வில்லிசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட்டுக்காக [illegible] காங்கேசன்துறை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மே மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram : "Eenaadu" Telephone 239. Registered as a Newspaper in Sri Lanka]